செ.வெ.எண்:201 நாள்:29.03.2021

**சட்டமன்ற தேர்தலையொட்டி வாக்காளர் விழிப்புணர்வு அஞ்சல் அட்டைகள் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

---

சட்டமன்ற தேர்தலையொட்டி வாக்காளர் விழிப்புணர்வு அஞ்சல் அட்டைகள் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (29.03.2021) தொடங்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் ஏப்ரல் 6ல் நடைபெற உள்ளதையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் வாக்காளர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் வாக்காளர் விழிப்புணர்வு அஞ்சல் அட்டைகள் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த வாக்காளர் விழிப்புணர்வு அஞ்சல் அட்டைகள் கடந்த தேர்தல்களின் போது குறைவான வாக்குப்பதிவு பெற்ற பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அஞ்சல் கடிதத்தில் அழைப்பிதழாக 06.04.2021 அன்று 18 வயது நிரம்பிய, வாக்காளர் பட்டியலில்

இடம் பெற்றுள்ள, தங்கள் குடும்பத்தில் அனைவரும் தங்கள் வாக்குகளை சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு முகக்கவசத்துடன் வருகை தந்து போதிய சமூக இடைவெளியை கடைபிடித்து தவறாமல் தங்கள் வாக்கினை பதிவு செய்யும்படி அன்புடன் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் மோ.உமா, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பூவதி, பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர்கள் மரு.கலைவாணி, மரு.விஜயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**